# தலைப்பு: நினைவலைகள்




## வழங்கியோர்

### நினைவலைகள்

ஏட்டுக் கல்வியும்
எழுதுகோலும் என் பாட்டனுக்குக் கிடைக்காத
பரிதாபம்

சுதந்திரச் சுவாசத்திற்கு
ஏங்கிய பாட்டனும் தாத்தனும்

கிடைத்த சுதந்திரத்தை
சாதியென்ற
வேதிக் குடுவையில் அடைத்து

நாதியற்ற தமிழனை
நடுத்தெருவில் நிறுத்தி காகிதக் கப்பல்விடும்
நீசர்களின் செயல்
நிழல் போல் தொடர்கிறதே

சாதித்தீ யென்னைத் தீண்டும்போது மதமெனும்
மரநிழலில்
ஒதுங்கினேன்
அங்கும் ஓநாய்க் கூட்டம்

ஓடும் ஓடைநீர்
ஓரடி உயர்ந்து
தேரடிவடம் போல்
இயந்திரம் இழுக்க
கணத்த இதயம்
கசிந்தது கண்ணீர்

**கா பெரியசாமி**
**காரைக்குடி**

### நினைவலைகள்

எழுதுகோலும்
எள்ளி நகையாடியது
என் பள்ளி குறும்பை
கலைநயத்துடன் கவி வடித்த பொழுது

இதயத்துடிப்பு இரட்டிப்பானது
களிப்பு நிறைந்த
என் கல்லூரி காலத்தை
கதை எழுதிய பொழுது

புள்ளி மானாய்
துள்ளிகுதித்தது என் மனம் !
மாமன் மாலை சூடிய அக்கணம் !

குதூகலத்தில் கூடியது என் உயரம் ! குறைந்தது
என் துயரம் !
என் குலம் காக்க குழந்தையை
ஈன்ற தினம் !
அனுபவங்கள் அலைகடலாய்
என் அகத்திற்குள் புரண்டு ஓடியது பின்
சங்கமாக சங்கமித்தது
நீங்கா ! நினைவலையாய்
நீலவானில்
மனதை வருடிச்செல்லும் வானவில்லாய் வந்து
போகும் நினைவலையே !
நீ !வாழ்க !என் நினைவு என்ற
பெட்டகத்திற்குள்
பசுமையாகவும், பத்திரமாகவும் !

**கவிஞர் சை.சபிதா பானு**
**(ஆங்கில ஆசிரியை காரைக்குடி)**

## நினைவலைகள்

பச்சைப் புல்வெளிகளும்
பரவியத் தென்றலும்
பிணைந்த நட்புகளுக்கு
பரவசமூட்டிய பழைய நினைவுகள்!

இலக்கியப் பேச்சுகளோ
இரகசியப் பேச்சுகளோ
இதந்தரும் பேச்சுகளோ
இரம்மியக் கூடல் நினைவில்...

தென்னங்குலைகளின்
தெவிட்டாத இளநீர்
ஒன்றுபட்டோரின்
உதட்டை நனைத்தது நினைவில்!

ஒய்வு நாளொன்றில்...
ஓலைக்குடிலின் ஒய்யார நிழலில்
ஒருங்கிணைந்த ஒத்தக் கருத்துக்கள்
வழிகாட்டிய வெற்றி நினைவுகள்!

தொடர்பு எல்லைக்கப்பால்
தொந்தரவின்றித் தொடர்ந்த
இரைச்சலில்லா பேச்சலையில்
இன்பம் பெருகிய பெருநினைவுகள்!

இயற்கையின் மடியில்...
இன்முகப் பரிவர்த்தனைகள்!
பார்க்க வந்தன
பறவைகள் தரையிறங்கி!

**ஆக்கம்: N. தௌபீக் அகமது**
**சவுதி அரேபியா**